# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

***சுற்றறிக்கை எண்:-92*** ***தேதி:20.09.2011***

## ஜெய்பூர் மத்திய செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL நிறுவனத்தின் நிதியாதாரம் பலப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டு நடவடிக்கைக் குழு வாடிக்கையாளர் மகிழ்விப்பு வருடம் நடத்தி போராடி வருவது ஒருபுறம்; சிக்கன நடவடிக்கை என்ற பெயராலே ஊழியர்கள் பெற்று வந்த உரிமைகளை நிர்வாகம் பறித்து வருவது இன்னொரு புறம்; அதே பெயராலே அரசாங்கமும் நிர்வாகமும் இணைந்து விருப்ப ஓய்வு திட்டத்தை அறிமுகப்படுத்த முயற்சித்து வருவது மற்றொரு புறம்; இத்தகைய சூழ்நிலையில் நமது BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு செப்டம்பர் 16 முதல் 18 வரை ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் சிறப்பாக நடைபெற்றது. ராஜஸ்தான மாநில பயிற்சி கேந்திரத்தில் (RTTC) நடைபெற்ற அந்த மத்திய செயற்குழுவில் அகில இந்திய தலைவர் தோழர் VAN நம்பூதிரி தேசிய கொடியினை ஏற்றி வைக்க, நமது பொது செயலாளர் தோழர்.P.அபிமன்யு நமது சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். CITU சங்கத்தின் ராஜஸ்தான் மாநில செயலர் தோழர்.ரவீந்திர சுக்லா நமது மத்திய செயற்குழுவை துவங்கி வைத்தார். ஆந்திர மாநில செயலர். தோழர்.J.சம்பத் ராவின் பணி ஓய்வினை ஒட்டி அவர் கவுரவிக்கப்பட்டார். பின்னர் பொதுசெயலரின் நடவடிக்கைக்கான குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்ட பின் தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். 17ஆம் தேதியன்று ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகள் தொடர்பாக பிரத்யோகமாக விவாதிக்கப்பட்டது. இதில் CITU செயலர் தோழர்.ஸ்வதேஷ் தேவ் ராய் உரையாற்றினார். இந்த மத்திய செயற்குழுவில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

01) கீழே தரப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து **மாவட்ட, மாநில, அகில இந்திய மட்டங்களில் 27.09.2011 முதல் மூன்று நாட்கள் உண்ணாவிரதம்** நடத்திட மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

**<u>கோரிக்கைகள்</u>**

***அ) விருப்ப ஓய்வு திட்டத்தை கைவிட வேண்டும்.***

***ஆ) போனஸ் (PLI) வழங்க வேண்டும்.***

***இ) பறிக்கப்பட்ட சலுகைகளான LTC, விடுப்பை காசாக்குதல், மருத்துவப்படி ஆகியவற்றை திரும்ப வழங்க வேண்டும்.***

***ஈ) ஊழியர்களுக்கான பதவி உயர்வு கொள்கையில் தொழிற்சங்கம் கோரியுள்ள மாற்றங்களை அமுல் படுத்த வேண்டும்.***

***உ) NE-12 ஊதிய விகிதத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.***

அதே சமயம் மற்ற சங்கங்களையும் அணி திரட்டி ஒன்று பட்ட போராட்டங்களுக்கு முயற்சி எடுக்க வேண்டும் என மத்திய செயற்குழு அகில இந்திய தலைமைக்கு வழிகாட்டியுள்ளது.

02) **"வாடிக்கையாளர் மகிழ்விப்பு வருட"**த்தை இன்னமும் அதிக வேகத்துடன் அமுல்படுத்திட வேண்டும் என மாநில மாவட்ட சங்கங்களுக்கு மத்திய செயற்குழு வழிகாட்டியுள்ளது.

03) செப்டம்பர் 07, 2011 அன்று டெல்லியில் நடைபெற்ற **'தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்க'**த்தின் அறைகூவலான **08.11.2011 அன்று நடைபெற உள்ள சத்தியாகிரகம்/ சிறை நிரப்பும்/ மறியல் போராட்டங்களில்** நாமும் கலந்துக் கொள்ள வேண்டும் என நமது மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

04) **'ஓய்வூதிய நிதி ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆணைய மசோதா'**(PFRDA)விற்கு எதிராக நடத்த வேண்டிய **கையெழுத்து இயக்கத்தை** முழுவீச்சில் நடத்திடவும், **நவம்பர் 25,2011 அன்று நடைபெற உள்ள பாராளுமன்றம் நோக்கிய பேரணி**யில் பெருந்திரளாக பங்கேற்கவும் மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

05) 'உலக தொழிற்சங்கங்களின் சம்மேளன'த்தின் (WFTU) அறைகூவலான **அக்டோபர் 3, 2011 அன்று நடத்த வேண்டிய 'சர்வதேச நடவடிக்கை தின'**த்தை மிகச் சிறப்பாக அமுல் படுத்த வேண்டும்.

06) விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலான புதிய அங்கீகார விதிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளில் அகில இந்திய தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது. முன்மொழியப்பட உள்ள அந்த விதிகளில் மற்ற அம்சங்கள் தொடர்பாக முடிவெடுக்க அகில இந்திய தலைமைக்கு மத்திய செயற்குழு அதிகாரம் அளித்தது.

07) நமது அகில இந்திய சங்க கட்டிடம் வாங்கும் பணியினை விரைவு படுத்திட வலியுறுத்திய மத்திய செயற்குழு, மாநில சங்கங்களுக்கு கூடுதல் கோட்டாவும் நிர்ணயித்துள்ளது. வாங்கப்பட உள்ள சங்க கட்டிடத்திற்காக "K.G.BOSE MEMORIAL TRUST" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கான அறங்காவலர்களாக 7 தோழர்களை மத்திய செயற்குழு நியமித்தது.

08) ஒப்பந்த ஊழியர்களுக்கான சங்கங்கள் இதுவரை உருவாக்கப்படாத மாநிலங்களில் உடனடியாக மாநில சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்தந்த மாநில சங்கங்கள் இதற்காக பொருப்பெடுத்து செயல்பட வேண்டும்.

09) அடுத்த மத்திய செயற்குழுவை ஆந்திர மாநிலத்தில் நடத்திட அந்த மாநில சங்கம் விடுத்த வேண்டுகோளை மத்திய செயற்குழு ஏற்றுக் கொண்டது.

10) அடுத்த அகில இந்திய மாநாட்டினை பஞ்சாப் மாநிலத்தில் செப்டம்பர், 2012ல் நடத்திட மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது.

ஜெய்பூர் மத்திய செயற்குழுவின் அனைத்து முடிவுகளையும் மிகச்சிறப்பாக அமுல் படுத்திடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**S.செல்லப்பா**
**மாநில செயலர்.**